நவம்பர் மாதச் சிந்தனைகள்

SIGNUM FIDEI



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

2022

PUBLISHED BY

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

இறைப்பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்று கருதும் நம் ஒவ்வொருவருக்கும் இறைவனின் வார்த்தைகள் வாழ்க்கையின் ஒளியாகவும், வழியாகவும் மற்றும் ஊன்றுகோலாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமில்லை. உன்னதத் தேடலோடு இறைவார்த்தையை வாசித்து தியானிப்போம். நம்மிலும் இறைவார்த்தை செயலாக்கம் பெற வாழ்த்துகிறேன்.

அருட்சகோ. **பிரிக்ஸ்டன் பர்னாந்து** FSC



லசாலிய அழைப்பு
என்பது வகுப்பறையே
ஆலயமாக,
மேஜையே பலிப்பீடமாக
ஆசிரியரே
பலிப்பொருளாகக்
கொண்டு
இளைஞர்களுக்கு
அறிவையும்,
ஞானத்தையும் அளிக்கும்
**ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை - 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

உலக சவால்கள் உரசிச் சென்றபோதும், இறையனுபவத் தூண்டுதலோடு, மனிதத்தில் புதைந்து கிடக்கும் புனிதத்தை வெளிப்படுத்தி வெற்றி கண்டவர்கள் புனிதர்கள்.

"விண்ணுலக இறைமகுடம்" என்னும் வியத்தகு இலக்கிற்காக, மண்ணுலக அநீதிகள், சவால்கள் இவற்றை இறை நிழலில் நின்று எதிர்கொண்டவர்கள் புனிதர்கள்.

நாம் ஒவ்வொருவரும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட இறைமக்களாய் வாழ விரும்புகிறோம் என்பது தான் சவால்கள் நிறைந்த நிதர்சனம்.

இறைமக்களாகிய நமது ஒவ்வொருவரின் பிறப்பும், நமக்கான இறைத்திட்டத்தை, நிறைவேற்றுவதையே அடிப்படையாகக் கொண்டது.

ஒவ்வொரு நாளும் நம் பிறப்பிற்கான இறைத்திட்டத்தைக் கண்டறிய முற்படுவோம். அதைச் செயல்படுத்த முற்படும்போது எழுகின்ற, துன்பங்களை இறை உந்துதலோடு மனந்தளராமல் எதிர்கொள்வோம். அப்போதுதான் நமது இறை அனுபவம், பிறருக்கு ஒளியாகவும் வாழ்வாதாரமாகவும், வழியாகவும் விளங்கும்.

இவ்விறைத்திட்டத்தின்படி இறைவனை உய்த்துணர்ந்து, இறைவனை நம் செயல்களின் மூலமாக மகிமைப்படுத்தும் போது தான் நமக்குள் "புனிதம்" என்னும் உணர்வு துளிர்க்கிறது.

"புனிதம்" என்பது எட்டாதக் கனியன்று, நமது இயக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் இறைச்சாயல் வெளிப்படுமாயின், அது எட்டும் கனியே. அக்கனியை ஒவ்வொருவரும் சுவைக்க முற்படுவோம்...!

முதல் வாசகம்
தி.வெ 7:2-4,9-14

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-6

நற்செய்தி
1 யோவான் 3:1-3

புனிதர்கள் அனைவரும் பெருவிழா

நவம்பர் 2022

**01**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC



### தெலசாலின் பொன்மொழி

புனித தெலசாலின் புதுமைகள் திருச்சபையில் ஏற்றுகொள்ளப்பட்டன நாம் கடவுளை விசுவாசத்தினால் உணர்வதுபோல, புனிதர்கள் அவரை இயற்கையாக பார்கின்றனர் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சா.ஞா 3:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 27:1,4,13-14

நற்செய்தி
உரோமையர் 5:5-11

இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு

நவம்பர் 2022

**02**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**இருந்தும் இறப்பதைவிட இறந்தும் இருப்பதே அழைப்பு**

மனித இனத்தின் வாழ்வுக்கான வரையறை என்பது, "கருவறை முதல் கல்லறை வரையில்தான்" என்ற இயற்கை விதியானது மனித வாழ்வினில் மறுக்க முடியாத ஓர் அங்கம்.

நிலையற்ற இவ்வாழ்வை நிரந்தரமென நம்பி, மதி மயங்கி நிற்போர் பலர். வாழ்வின் அர்த்தத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கும் மனித சமூகத்திற்கு, இறப்பு என்பது ஒரு எச்சரிக்கை அழைப்பு. நமது படைப்பின் நோக்கத்தை அறியாத அல்லது அறிய முற்படாத மனிதர்கள், இருந்தும் இறந்தே வாழ்கின்றனர். இவர்களது உயிர்மூச்சு அடங்கியபின், இவர்களைப் பற்றிய எந்தப் பேச்சும் இவ்வுலகில் இருக்கப்போவதில்லை.

வாழ்வின் அர்த்தமறிந்து, பிறரையும் வாழவைக்க முனைபவர்கள், வீழ்ந்த பின்னும் வாழ்கிறார்கள். இவர்களது வாழ்க்கைத் தழும்புகளெல்லாம், வருங்காலத்தவருக்கான தத்துவங்களாய் ஒளிர்கின்றன. மரணித்தபின் இவர்களது உயிரற்ற உடல்கள் மண்ணில் புதைக்கப்படினும், பிறரது எண்ணங்களில் இவர்களின் வாழ்வியல் விழுமியங்கள் விதைக்கப்படுகின்றன. நல்லவண்ணம் வாழ்ந்து உயிர்நீத்தவர்களின் வாழ்வானது, அவர்களது மறைவுக்குப் பின்னரும் மறுவாசிப்பு செய்யப்படுகிறது. வரலாறுகளின் வழியே, அவர்கள் நினைவு கூறப்படுகிறார்கள். எனவே, இறப்பு என்பது மீண்டும் வாழ்வதற்கான ஓர் அழைப்பாகும்.

இறப்பானது வாழ்வில் ஒருமுறை மட்டுமே. ஆனால் பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்ட நமது வாழ்வானது, பல மகிழ்ச்சி நிறைந்த அதிசயங்களுடன் தினமும் வாழ நம்மை அழைக்கிறது.

இறுதி நாளில் இறைவனோடு கலப்பது உறுதி. ஆனால், நமது தற்கால வாழ்நாளானது, அழுக்கு நிறைந்த எண்ணங்கள் அகற்றப்பட்டு, மறைவார்த்தைகளின் மாசற்ற எண்ணங்களோடும், தீங்கற்ற தியாக உணர்வுகளோடும் தினமும் உயிர்தெழ அழைப்பு விடுக்கிறது.

அனைவரும் தினமும் மரணித்து உயிர்த்தெழுவோம். இறப்பை வென்று, மனிதத்துவ வாழ்வை மையமாக்க முற்படுவோம். உயிரோடு இருப்பது மட்டும் வாழ்க்கையல்ல....
உயிர்ப்போடு இருப்பதே வாழ்க்கை....!



### தெலசாலின் பொன்மொழி

அனைத்து ஆன்மாக்கள் விழா

இறந்த ஆன்மாக்களுக்காக செபியுங்கள். அவர்கள் கடவுளின் நன்மை தனத்தில் பங்கேற்க காத்திருக்கின்றனர். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
பிலிப்பியர் 3:3-8

பதிலுரைப்பாடல்
திபா. 105:2-3,4-5,6-7

நற்செய்தி
லூக்கா 15:1-10

புனித
மார்டின் தெ போரஸ்

நவம்பர் 2022

**03**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**அக இருள் அகலட்டும்......இறை விளக்கு ஒளிரட்டும்**

நாம் வாழும் ஒரே இல்லம் நம் உடல் மட்டுமே, இவ்வில்லம் தூய்மையின்றி இல்லாது இருப்பின் அஃது மனித மனக்கழிவுகளின் மாசுக் களஞ்சியமாகத் திகழும்.

இந்த ஊனுடல் தேடல்களின் ஆக்கிரமிப்பினால், கட்டுக்குள் வராத மனித மனங்களின் ஆசைகளை அரங்கேற்றும். இவற்றால், "தான் " என்ற அகங்காரம் மேலோங்கி, சுயநலம் கோரதாண்டவமாடி, பிரித்தாளும் எண்ணத்திற்கு அடித்தளமிடும். சமாதானம் வேறுக்கப்பட்டு, வாழ்வின் அர்த்தங்கள் வதைக்கப்படும். அடக்கமில்லாத மனவெழுச்சியின் வாயிலான மனித இயக்கங்கள் யாவும் இறை இயேசுவின் மீட்புத் திட்டத்திற்கு எதிரான ஒன்று.

நம் இருளடைந்த உள்ளத்தில் இயேசுவை ஒளியாக ஏற்றும்போது தான், வாழ்வின் அர்த்தங்கள் வெளிச்சம் பெறும். இறை ஒளியின் வருகை, நமக்கும் பிரமாண்டமான மாற்றங்களை நிலை நிறுத்தும். அதுவே ஊனுடல் தேவைகளிலிருந்து ஆவிக்குரிய தேடல்களை வழிவகுக்கும்.

நம் இதயங்களில் இறையொளி பிரகாசிக்கும் போது, ஊனுடலின் அடிமைத்தனங்களும் அர்த்தமற்ற எதிர்பார்ப்புகளும் சாம்பலாகும். இறையொளியின் இன்ப அதிர்வுகள், நிலையான அமைதியினை நிலைநிறுத்தும். ஊனுடல் ஆதிக்கத்தால் உருக்குலைந்த மனிதர்கள், இறையொளி மூலம் இன்பம் கண்டிட, நாமும் கலங்கரை விளக்காவோம்.

உலக மீட்பரின் உன்னத ஒளியானது நம் உள்ளங்களில் நிரம்பிடும்போது, தொலைந்து போன நம் உருவங்கள் காட்சி பெறும். நம் வாழ்வின் வளங்கள் மீட்சி பெறும்.



**தெலசாலின் பொன்மொழி**

நமக்கு இறப்பு என்பது கடினமாக ஒன்றாக உள்ளது. ஏனென்றால், நாம் அன்பு செய்ததை நம்மால் விட்டு கொடுக்க இயலவில்லை. கன்னிமரியாளிடம் வேண்டுங்கள். அவளின் வேண்டுதலால், இறப்பின் மகிழ்ச்சியில் பங்கேறுங்கள் (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
பிலிப்பியர் 3:17-4:1

பதிலுரைப்பாடல்
திபா. 122:1-2,4-5

நற்செய்தி
லூக்கா 16:1-8

புனித சார்லஸ் பொரோமெயோ

நவம்பர் 2022

**04**

வெள்ளிக்கிழமை

**முன்மதியே முதிர்ச்சியின் முன்மாதிரி**

முன்மதியோடு வாழ்ந்தவர்கள் மட்டுமே இன்று முன்மாதிரிகளாக வலம் வருகின்றனர். பணத்திற்கும், சமூக அந்தஸ்துகளுக்கும், பதவிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற இக்கால சமுதாயத்தில் எதனை அடிப்படை அளவீடுகளாகக் கொண்டு முன் மாதிரிகளை தேர்ந்தெடுக்கின்றோம் என்பது நாம் ஆராய வேண்டிய ஒன்று. தன்னை முற்றிலும் அறிந்து, தன்னையே வென்றவர்களின் செயல்பாடுகள்தான் முன்மதியினை அடிப்படையாகக் கொண்டு அமையும். அவ்வாறு முன்மதியுடன் தனது பிறப்பின் இறைத்திட்டத்தை அறிந்து, தனது வாழ்வில் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டி, பிறரையும் வாழ அழைப்பு விடுத்தவர் இறைமகன் இயேசு. அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் முன்மதியின் ஆழத்திலிருந்து மனித சமுதாயத்தின் நிலைவாழ்விற்காக இறைத்தூண்டலால் உதித்தவை.

இறைவார்த்தைகளே நம் வாழ்க்கைப் பாதையின் விளக்கு, இவ்விளக்கைப் பின்பற்றுவோர்களின் இறைத்திட்டம், திட்டவட்டமாக நிறைவேறுகின்றது. முன் மதியின்மை முதிர்ச்சியின்மைக்கு வித்து, முதர்ச்சியின்மை அனைத்து இழிச்செயலுக்கும் வித்து. இறைவார்த்தையோ இழிவான ஊனுடலை இறையாவியைத் தாங்கும் ஊடகமாக மாற்றும். சவுலையே புனித பவுலாக மாற்றும். இறைவார்த்தைகளை நம்முள் நிலைநிறுத்துவோம். அதனை இறைச்செயலாக நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் வெளிப்படுத்துவோம். இவ்விறைவார்த்தைகள் நம் முன்மதியினைத் தூண்டட்டும். முன்மாதிரிகளுக்காக ஏங்காமல் நாமே முன்மாதிரிகளாகத் திகழ்வோம். இறைவார்த்தை நமதாகட்டும், நாமே அவராவோம்....



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் ஒரு ஜெபவீரராக இருங்கள். உங்களுக்காக மட்டுமன்று மாறாக மற்றவர்களையும் வழிநடத்துவதில் ஜெபிக்க வேண்டும்.

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
பிலிப்பியர் 4:10-19

பதிலுரைப்பாடல்
திபா. 112:1-2,5-6,8,9

நற்செய்தி
லூக்கா 16:9-15

புனித பெர்டில்லா

நவம்பர் 2022

**05**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC

### மனநிறைவு மலரட்டும் நேர்மை நேரெடுக்கட்டும்

இருப்பதில் நிறைவைக் காண்பதை தவிர்த்து இல்லாததை எதிர்பார்த்து வாழ்க்கையின் நிறைவை தொலைக்கின்றவர்களின் எண்ணிக்கை ஒரு பக்கம். சுய நல வாழ்வுக்காக நேர்மையை மறந்து வாழ்கின்றவர்கள் மறுபக்கம். இந்த இருவகையினரின் எண்ணிக்கையானது இயேசுவை வாழ்வின் மையமாகக் கொள்ளாதவர்களின் இளக்கற்ற வாழ்க்கை நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இன்று நம்மில் பலருக்கு மனநிறைவுடனும், நேர்மையுடனும் வாழ்வதே அசாதாரண காரியமாகிவிட்டது.

நம் வாழ்வில் இறையேசுவின் வருகை நமக்கு அநீதிக்கு புறம்பான வலுவூட்டப்பட்ட மன நிலையையும், எந்த சூழ்நிலையிலும் மனநிறைவுடன் வாழக்கூடிய தன்மையை உறுதி செய்கிறது. மேலும் மனித வாழ்விற்கு தேவையான மன அமைதியை நிலை நிறுத்துகிறது. இம்மனநிலை நம்மில் இறைவனைத் தேடுவதிலும் மற்றும் நம்மோடு வாழ்பவர்களில் இறைவனை காணவும் தூண்டுகிறது. அவரவர்க்கு அருளப்பட்ட பணியை நேர்த்தியுடனும், திறம்படவும் மேம்பட்டப் பணிகளை அசாதாரணமாக புரிவதற்கும் இஃது அச்சாரமாக அமைகிறது.

பணத்தின் மீது நாம் கொண்டுள்ள பற்றுறுதியும் அதை இல்லதோரிடம் பகிர்ந்தளிக்க இயலாத தன்மையும் இறைவன் நம்மில் குடியேற தடையாக உள்ளது. இறைமகன் இயேசு மட்டுமே ஒப்பற்ற செல்வம், இவரைத் தவிர்த்து மறு செல்வங்களில் நாட்டம் மிகையாகும் பொழுது மன நிறைவின்மையும், நேர்மையின்மையும் நம்மை ஆட்கொள்கிது. மனித இதயங்களில் நற்பெயர் ஈட்ட முயலுவதைவிட இறைவனோடு இணைவதால் பெறும் மன அமைதியை மகுடமாக அணிய முற்படுவோம்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் இயேசுவின் உடலாகிய திருச்சபைக்கு பணி செய்கிறீர்கள். கடவுள் மாணவர்களுக்கு போதிக்கும் பணியை உங்களுக்கு கொடுத்துள்ளார். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 மக்கபேயர் 7:1-2,9-14

இரண்டாம் வாசகம்
2 தெச 2:16-3:5

நற்செய்தி
லூக்கா 20:27-38

ஸ்பெயின் நகரத்து லசாலிய மறைசாட்சிகளின் திருவிழா

பொதுக்காலம்
32-ம் ஞாயிறு

நவம்பர் 2022

**06**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**உயிர்ப்பே இருத்தலின் உயிர்நாடி.**

மனிதன், தன் இதயத்துடிப்பு அடங்கும் வரை இயங்குவது மட்டுமே இருத்தலின் அடையாளமல்ல, உயிர்ப்பே இருத்தலின் உயிர் நாடி, உயிர்ப்பின்றி வாழ்தலானது, இருத்தலின் அர்த்தத்தை இருட்டடிப்பு! செய்யும். நிலையற்ற மண்ணுலக மனித வாழ்விலிருந்து, விண்ணுலக வாழ்வை நோக்கி விடுதலை பெறும் தத்துவத்தை, கிறிஸ்துவின் உயிர்ப்பு உறுதிப்படுத்தியது. மண்ணக வாழ்வில், நமது பங்களிப்புகள் யாவும், விண்ணக வாழ்வுப்பயணத்தின் தயாரிப்புகளைத் தாங்கி நிற்கிறது.

மண்ணக வாழ்வில் இறைவார்த்தையிலும், இறையேசுவிலும் நம்பிக்கைக் கொள்வோர்க்கு விண்ணக வாழ்வு நிச்சயம். மேலும், நமது செம்மையான செயல்பாடுகளும், நம் நாவின் நற்சொற்களும் அதை உறுதிப்படுத்துகிறது. நாவிலிருந்து சொற்கள் பிறழும்போது, இடர்களும் இழுக்குகளும் மனித உயிர்ப்புக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன. மேலும் பல நிலைகளில் நம்மை சதுசேயர்களாகவும், பரிசேயர்களாகவும் உருவெடுப்பதற்கு உறுதுணையாகின்றது.

சுயநலங்கள் சூழ்ந்து நிற்கும் இந்த விஞ்ஞான உலகில், விண்ணுகம் பற்றிய சிந்தனைகள், தற்போது கேலிக்குரியதாகிறது. தூய எண்ணங்களைத் துறந்து, மாய உலகில் மனதைச் செலுத்தும் இந்த மனப்போக்கு, மண்ணுலக வாழ்விற்கான இறைத்திட்டத்தை இழிவுபடுத்துகிறது.

கடவுளின் அன்பையும், இயேசு கிறிஸ்துவின் மனவுறுதியைக் கொண்டவர்களாக, நம்மை நாமே வளர்த்தெடுப்போம். நமது சொல், செயல், சிந்தனை யாவற்றிலும் விண்ணுலக வாழ்வு என்னும் இலக்கினை நிலை நிறுத்துவோம். இவ்விறைத் தூண்டுதல் இம்மண்ணுலக வாழ்வில் நம் உயிர்ப்பை உயிர்பெறச் செய்யட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் உடல்நலத்துடன் இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது (Ltr : 27)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

**இறை நம்பிக்கையில் ஆழ்ந்து, மன்னிக்கும் மனப்பக்குவம் கொண்டவராக வாழ்க்கையில் வலம் வரவேண்டும்.**

முதல் வாசகம்
தீத்து 1:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-2,3-4,5-6

நற்செய்தி
லூக் 17:1-6

புனித
வில்லிபரார்டு

நவம்பர் 2022

07

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC

எப்படியும் வாழலாம் என்ற சித்தாந்தம் மனிதத்தை சிதைப்பது உறுதி. இரக்க உணர்வை உயர்த்திப் பிடிப்பதே மனித வாழ்வின் உயரிய வேரோட்டமென, இன்றைய விவிலியச் சிந்தனைகள், வாழ்க்கையின் ஆழத்தை வரையறுக்கிறது. தங்களது குற்றங்களை மறைத்து, பிறரது தவறுகளில் தலையிட்டு, அவற்றை மிகைப்படுத்துபவர்கள் பலர். இத்தகையோர் வாழும் இச்சமூகத்தில், மன்னிப்பு என்னும் மனிதாபிமானம் மாயமாகிப்போனது. தன்னலம் தழைத்து, சுயநலம் சூழ்ந்து நிற்கும் மனித வாழ்வில், இறையேசுவின் அருள்மொழிகள் நம் அகத்தை ஆராய்வதற்கு அழைப்பு விடுகின்றது. இறையொளி பெற்ற இதயத்தவருக்கே, சக மனிதரைச் சமத்துவ உணர்வோடு நோக்கும் வல்லமை கிட்டும்.

கடவுளின் கருணை ஒளியால் நிரம்பப்பெற்றவர்களுக்கு, இரக்கத்தின் வாயில் திறக்கப்படும். இத்தகையோர் அநீதிக்கு எதிராய்க் கிளர்ந்தெழுவர். அல்லல் படுவோர்க்கு ஆதரவுக்கரம் நீட்டுவர். மேலும், தான் பெற்ற இறையொளியை பிற மனிதரின் உள்ளத்திற்குள்ளும் ஊடுருவ நினைப்பர். இறைச்சித்தத்தின் மீது நம்பிக்கை கொண்ட புனித தெலசாலுக்குள் பிரகாசித்த இறையொளியே, அவரைக் குழந்தைகளுக்குக் கல்வியொளி ஏற்றுமாறு கட்டளையிட்டது. அந்த சகாப்தம் இன்றுவரை தொடர்கிறது. தவறுகளைத் தண்டிப்பது எளிது. ஆனால் இறைத்தன்மை கொண்ட இரக்க மனமே இன்றைக்குத் தேவையாக இருக்கிறது. நமது வாழ்வும் இறையொளி மிக்க வாழ்வாக ஒளிரட்டும்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் உங்களையே கடவுளுக்கு கொடுத்துள்ளீர்கள். ஆகையால் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும் அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும்.(MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தீத்து 2:1-8,11-14

பதிலுரைப்பாடல்
திபா. 37:3-4,18,23,27,29

நற்செய்தி
லூக்கா 17:7-10

அருளாளர்
ஜான் டன்ஸ் ஸ்கோட்டஸ்

நவம்பர் 2022
**08**
செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### அருளப்பட்ட பணியை அற்புதமாக நிறைவேற்று

இன்றைய இறைவார்த்தைகள் இறைப்பணியை மேற்கொள்ளும் இறைவாக்கினர் போன்ற ஒவ்வொருவருக்கும் இறைவிருந்தாக அமைகிறது. நமக்கு அருளப்பட்ட இறைப்பணியைச் செவ்வனே புரிவதற்கு தேவைப்படும் இறையாற்றலைப் பெறுவதற்கு வேண்டிய உத்திகளை இன்றைய இறைவார்த்தைகள் வலியுறுத்துகின்றன. அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அறிவும் தெளிவுடையவர்களாகவும், கண்ணியம் மற்றும் கட்டுப்பாடு உடையவர்களாகவும் திகழ வேண்டும். இறைவனில் நம்பிக்கையும், அன்பில் மனஉறுதிகொள்கையும் ஆழமாக நம் வாழ்க்கையின் மூலம் பறைசாற்ற வேண்டும் என்பதை இன்றைய வாசகங்கள் பறை சாற்றுகின்றன.

பணிவாழ்வை மேற்கொண்டவர்களின் மனநிலை எவ்வித சலுகைகளை நோக்கி இல்லாமலும், இப்பணியின் மூலம் கிடைக்கும் பிரதிபலன்களும், நற்பெயர்களும், நல் விளைவுகளும் இறைவனால் மட்டுமே அரங்கேறியது என்ற உயர்ந்த நிலைப்பாட்டை கொண்டவர்களாக வாழவேண்டுமென்று இன்றைய இறைச்சிந்தனை மெய்ப்பித்துக் காட்டுகின்றது. கல்விப்பணியில் குழந்தைகளின் இதயங்களைத் தொட்டு அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதை மட்டுமே இலக்காகக் கொண்டு பணியாற்ற வேண்டுமென்ற புனித லசாலின் சித்தாந்தமும், இன்றைய இறைவார்த்தையே மையமாகக் கொண்டு அமைகின்றது.



### தெலசாலின் பொன்மொழி

இயேசு கிறிஸ்துவை மரியாதையுடனும் மற்றும் நன்றியுணர்வோடும் வரவேற்பு செய்யுங்கள். அவரின் அன்புக்கு ஏற்ப அன்பு செலுத்துங்கள் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசேக்கியல் 47:1-2,8-9,12

பதிலுரைப்பாடல்
திபா. 46:1-2,3,4-5,7-8

நற்செய்தி
யோவான் 2:13-22

இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா

நவம்பர் 2022
**09**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

## சிந்தனைத் துளிகள்

**மனித உள்ளங்களை இறைவனின் இல்லமாக மாற்றுவதே இறைப்பணி.**

அடுக்குமாடி கட்டிடங்களை எழுப்புவதிலும், கொள்கைச் சித்தாந்தங்களைச் செதுக்குவதிலும், மனிதப் பெருமைகளை நிலைநாட்டிக்கொண்டிருக்கும் நிலை இக்கால இறைவாழ்வின் அடிப்படையான இறைச்சிந்தனையை அசைத்துப் பார்க்கிறது. மனிதத்தைப் புனிதமாக்க உருவாக்கப்பட்ட பணிவாழ்விற்கு இன்றைய மையச்சிந்தனை கேளிக்கைச் சவால் விடுகிறது. இதனை நன்கு அறிந்த ஆசிரியர்களின் பாதுகாவலர் புனித தெலசால் அன்றே தன் சகோதரர்களுக்கு வகுப்பறையை ஆலயமாகவும், மேசையை பலிபீடமாகவும், மாணவச் செல்வங்களை பலியிடுபவராகவும் தங்களை பலிபொருளாகவும் கருதி மாணவ இதயங்களைத் தொட்டு அவர்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதைத் தங்களது கல்விப் பணிவாழ்வின் மையமாகவும், இறைமகன் இயேசுவை ஒவ்வொரு குழந்தைகளும் தங்களது வாழ்வின் மையமாகவும், வாழ்வாதாரமாகவும், கருத வேண்டுமென்பதை தங்களது பணிவாழ்வின் உயிர் நாடியாக மெய்ப்பித்தார்.

பணிவாழ்வில் இணைத்துள்ள நாம் ஒவ்வொருவரும் இறைமகன் இயேசுவைப் போல் இறைமதிப்பீடற்ற கொள்கைகளையும், இதற்கு மாறான எதிர்மறை செயல்பாடுகளையும் விரட்டியடித்து பணித்தளத்தில் இறைவனை வெளிப்படுத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் ஞானத்தால் உங்கள் மாணவர்களை தீய பழக்கங்களிலிருந்து மீட்டுள்ளீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

**இறைவனை வெளிப்படுத்துகின்ற புனித செயல்களே இறையாட்சியின் அடையாளங்கள் ஆகின்றன.**

தெருவெல்லாம் கல்விச்சாலைகள் நிறைந்திருப்பினும் சமுதாயத்தில் மனிதத்தன்மைகள் குறைந்து, புனிதத்தன்மையினை கற்களிலும், உயிரற்ற வார்த்தைகளிலும் தேடித்திரியும் அவல நிலைகளை நாம் காண்கின்றோம்.. புனிதச் செயல்கள் மனிதத்தில் வெளிப்பட்டாலும், அவை வெறும் ஆடம்பர விளம்பரமாகச் செயல்படுகின்றன. சவால்நிறைந்த சமூகத்தில் புனித தெலசாலின் கோட்பாடான "குழந்தைகள் அனைவரும் இறைவனின் சாயல்கள்" மனதிற்கும் மனிதத்திற்கும் இதம் அளிக்கிறது.

என்றெல்லாம் மனிதன் இறைகுணங்களை தன்னிலே வெளிப்படுத்துகிறானோ அன்றெல்லாம் இறையாட்சி மண்ணுலகிலும் சாத்தியமாகிறது. லசாலியக் கல்வியியல் மையமும் தன்னைச் சார்ந்த சகோதரர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் இறைமகன் இயேசுவை தங்களது இருதயத்தில் தாங்குவதோடு மட்டுமல்லாமல், செயலிலும் வெளிப்படுத்த வலியுறுத்துகிறது.

கல்வியை வணிகமாகக் கொண்ட கல்விச் சாலைகள் பெருகும் இவ்வேளையில் குழந்தைகளுக்கு மனித மாண்புகளைச் சொல்லி தந்து அவைகளை செயலில் வெளிப்படுத்தும் நுணுக்கங்களைக் கற்பிக்கும் கல்வி நிலையங்களாக இறைபணியாளர்களின் பணி நிலையங்கள் உருவெடுக்க வேண்டும். இதுவே இன்றைய இறைச்சிந்தனையின் மையமாக அமைகிறது.

முதல் வாசகம்
பிலமோன் 7-20

பதிலுரைப்பாடல்
தி.பா. 146:7,8-9,10

நற்செய்தி
லூக்கா 17:20-25

புனித பெரிய லியோ

நவம்பர் 2022
**10**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC



### தெலசாலின் பொன்மொழி

திருதூத பணியில் பங்கேற்கும் நாம், நம் பணிகளில் ஆர்வத்தை அதிகமாக்க வேண்டும். இல்லை என்றால் குறைவான பலனையே விளைவிப்போம். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
2 யோவான் 4-9

பதிலுரைப்பாடல்
திபா. 119:1,2,10,11,17,18

நற்செய்தி
லூக்கா 17:26-37

தூர் நகர்ப் புனித மார்ட்டின்

நவம்பர் 2022

**11**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

## சிந்தனைத் துளிகள்

**இறைவார்த்தையை செயலில் வெளிப்படுத்துதலே ஞானத்தின் வெளிப்பாடு**

இறைப் போதனையை வெறும் வார்த்தைகளோடு நிறுத்திவிடாமல் செயலாக்கத்தில் வெளிப்படுத்துவதினால் மானுடத்திற்கு ஏற்படும் நன்மைகளையும், இறைவார்த்தகைளின் மையத்தை மீறுவதனால் ஏற்படும் தீமைகளையும் இன்றைய இறை சிந்தனைகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மையப்படுத்துகின்றன. செல்வங்களையும் பெருக்க, கைதேர்ந்த இறைவாக்கினர்களுக்கு, பெரும் சவாலாகவே உள்ளது.

இச்சவாலை இறைவல்லமையோடு, ஏற்று அதை எளிதாக தம் கல்விப் பணியின் மூலமாக இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டியவர் ஆசிரியர்களின் பாதுகாவலரான புனித தெலசால். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சிறாரை மாசற்ற வழியில் நடப்பதற்கும், புனித தெலசாலின் கல்விப்பணியின் கோட்பாடுகள் வழிவகுக்கின்றன. விவிலியத்தினை நன்கு கற்றுத் தேர்ந்து, அதை வாழ்வினில் வழிகாட்டியாக ஏற்று, நன்கு நற்செய்தியின் மையங்களை தங்களது வாழ்வில் நடைமுறைப்படுத்துவதை துறவற வாழ்வின் முக்கிய அம்சங்களாக வலியுறுத்துகின்றனர். குழந்தைகளை மீட்டு இறைவனின் வழியில் நடத்துவதற்கும் இறைவனின் மீது கொண்ட பற்றும், இறைவார்த்தையை செல்முறைபடுத்துவதில் கொண்டுள்ள ஆர்வமும் முக்கிய அங்கம் என்பதை இன்றைய இறை சிந்தனை எடுத்தியம்புகிறது.



### தெலசாலின் பொன்மொழி

ஏழைகளுக்கு தர்மம் செய்கிறீர்களா? தினமும் நீங்கள் அவர்களுடன் இருக்கிறீர்கள். அவர்களை இயேசு கிறிஸ்து என்னும் ஆடையை அணியச் செய்ய தூண்ட வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
3 யோவான் 5:8

பதிலுரைப்பாடல்
திபா. 112:1-2,3-4,5-6

நற்செய்தி
லூக்கா 18:1-8

புனித
ஜோசபாத்

நவம்பர் 2022

**12**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**நம்பிக்கைக்குரிய தேடல் நன்மையையே வருவிக்கும்**

ஆழ்ந்த விசுவாசமே கத்தோலிக்கத்தின் மையம். இதுவே விவிலியத்தில் மெய்ப்பிக்கப்படும் இயேசுவின் 37 புதுமைகளுக்கும், ஆத்ம காரணமாகவும் தெளிவுறுத்துகிறது. நம்பிக்கைக்குரிய தேடலே அநீதிக்கு முற்றுப்புள்ளியாகவும், இறையனுபவத்திற்கு தொடக்கமாகவும் அமைகிறது.

இதனை புனித தெலசால் தனது சகோதரர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், தியான புத்தகங்களிலும் மிகுந்த இறைநம்பிக்கையின் சாயலாக ஜெபிப்பதனால் கல்விப்பணியில் அடையும் விருட்சத்தை எடுத்தியம்புகிறார். விவிலியத்தில் வரும் கைம்பெண்ணின் மனந்தளாராமை நம் ஒவ்வொருவரின் ஆன்மீகத் தேடலின் அடிப்படையையே அசைத்துப் பார்க்கிறது.

அயராது "ராபி" என்று கூவிய குருடன் பார்வை பெற்றதும், குணம் பெறுவேன் என நினைத்து இறைவனின் ஆடையைத் தொட்ட இரத்தப்போக்கினால் அவதியுற்ற பெண் மீட்சி அடைந்ததும், இறந்து போன தனது சகோதரன் லாசரைத் திரும்பப் பெற்றதுமாகிய இறை நம்பிக்கை வெற்றியை மீட்டுத்தரும் என்பதில் ஐயமே இல்லை... நம்முடைய விசுவாசத் தேடல் இறைவனுடைய செவிமடல்களை அடைந்து, அவருடைய அருள் நம் கரங்களின் மூலம் இருளடைந்த சமுதாயத்தை ஒளியேற்றட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் வழிநடத்துபவர்களின் மீட்புக்காக கடவுளிடம் தொடர்ச்சியாக செபியுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

### இறைவனில் உறுதியே இறுதியான வெற்றி

உழைப்பில் தளர்ச்சியையும், ஊதியத்தில் மிளிர்ச்சியையும், புறங்கூறுதலில் விலை மிகுந்த நேரத்தைச் செலவிடுகிறோம். வாழ்க்கை திட்டத்தின் ஆழத்தை அனுபவிக்காமல் வாழும் அனைவருக்கும் இன்றைய விவிலியச் சிந்தனை சாட்டையாக அமைகிறது. நமக்கு அருளப்பட்டப் பணியில் தளர்வடையாமல் இறைத்தூண்டுதலோடு முனையும் பொழுதுதான் நாம் ஒவ்வொருவரும் இறைவன் வாழும் புனித ஆலயமாக உருமாறுகிறோம். இவ்வுருமாற்றத்தை புனித தெலசால் இறைவனை பிறருக்குக் கொண்டு செல்லும் உன்னதமான இறைப்பணிக்கு நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை அவருடைய அருட்சகோதரர்கள் உணரவும் (Med 78:2) இப்பணியின் மேன்மையினை உணர்ந்து நிமிர்ந்த நடையுடனும் (MTR 9.1) துணிவுடனும் கொண்டு செல்ல அழைப்பு விடுகிறார்.

இறைவனின் ஆலயமாக உருமாறும் நாம் ஒவ்வொருவரும் இறைவனில் இருத்தலையும், நம் பணியில் காட்டும் மனஉறுதியும் நம்முடைய நாவன்மையில் மிளிரும் ஞானமும், இறைவனுக்கு அஞ்சி வாழும் இறையுணர்வும், இறைவனுக்காக எத்தகையத் துன்பங்களையும் அயராது எதிர்கொள்ளும் மனத்திடத்தையும் தன்னகப்படுத்த வேண்டும். இவ்விறைவனின் இருத்தலை நம் பணித்தளங்களில் நம்மில் வளம் பெற நாம் அழைக்கப்படுகின்றோம். இறைவனில் உறுதியாக இருப்பதே வாழ்வில் மீட்படைவதற்கான இறுதியான வழியாகும். நாம் நேரத்தை நேர்த்தியாகவும், புறங்கூறாமலும் இறைப்பணிக்காக கடுமையாக உழைப்பதன் மூலம் மெய்ப்பிக்க அழைக்கப்படுகின்றோம்.

முதல் வாசகம்
மலாக்கி 4:1-2

இரண்டாம் வாசகம்
2 தெச 3:7-12

நற்செய்தி
லூக்கா 21:5-19

புனித எட்வர்ட்

நவம்பர் 2022

**13**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் உங்களிடம் ஒப்படைத்துள்ள குழந்தைகளை கடவுளின் உருவங்களாக பாருங்கள் (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 1:1-4; 2:1-5

பதிலுரைப்பாடல்
திபா. 1:1-6

நற்செய்தி
லூக்கா 18:35-43

புனித லாரன்ஸ் ஓ தூலி

நவம்பர் 2022

**14**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC

### அன்பே ஆன்மீகத்தின் கருவி

இன்றைய இறைச்சிந்தனை நம் அனைவரையும் அன்பையும், நம்பிக்கையையும் மனித வாழ்க்கையின் இரு ஊடகங்களாகத் தாங்கி நமது ஆன்மீக அகப்பார்வையை இறைமகன் இயேசுவிடம் திரும்பப் பெற அழைப்பு விடுக்கிறது. அன்பே அகத்தின் ஆழம், இறைவனின் பண்பு, விவிலியத்தின் மையம். கிறிஸ்தவத்தின் அடித்தளம், அனைத்து கட்டளைகளிலும் மேன்மையானது. அன்பின் வெற்றிடம் வெறுமையின் அடையாளம், இறுமாப்பின் கூடாரம். அன்போடு கலந்த இறைநம்பிக்கை அதிசயத்தின் அவதாரம். நம்பிக்கையற்ற இறைவேண்டல் நேரத்தை விரயமாக்கும் அது கூரையற்ற கூடாரத்திற்கு சமம்.

அன்பும், கருணையும் இணைந்த கல்விப்பணியின் மூலமே குழந்தைகளின் இதயங்களைத்தொட்டு அவர்களது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவது சாத்தியம். புனித தெலசால் தனது சகோதரர்களுக்கு அவரது தியான விளக்க உரையில் (Med 134:2) எடுத்தியம்புகிறார். பொருட்களை நேசித்தும், மனிதர்களை தேவைக்குப் பயன்படுத்தும் அன்பிற்கு அர்த்தங்களும், அடையாளங்களும் வேரற்று இருக்கின்றன. தேவையின் நிமித்தமின்றி, உயரியத் தேடலோடு இறைவனில் நம்பிக்கைக் கொள்வோம். இந்நம்பிக்கை நம்மில் இறையன்பை விதைத்து மரமாகட்டும். இவ்வன்பு மரத்தின் நிழலில் அனைவரையும் அரவணைப்போம்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் ஏழைகளுக்கு கற்பிக்க வேண்டும். அவர்களை நீங்கள் அன்பு செய்கிறீர்களா? அவர்களின் மூலமாக இயேசுவுக்கு மரியாதை செலுத்துகிறீர்களா? (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
திவெ 3:1-6,14-22

பதிலுரைப்பாடல்
திபா. 15:2-5

நற்செய்தி
லூக்கா 19:1-10

புனித பெரிய ஆல்பர்ட்

நவம்பர் 2022

**15**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**இடைவிடா இறைத்தேடல் இறைவனையே வருவிக்கும்.**

எங்கும் வியாபித்து இருக்கும் இறைவன் என் உள்ளத்திலும் உறைந்திருக்கிறார் என்பதை உணராமல், அவரை அனுபவிக்காமல், அவரை வெளிப்படுத்தாமல் அலைந்து திரியும் அறிவிலிகளுக்கு இன்றைய இறைசிந்தனை அவர்களது மனதில் இறைவனை உணர்வதற்கான அழைப்பை விடுக்கிறது. மனித மனதில் இறைவனின் வருகை வியத்தகு பிரமாண்டமான மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

இறைவனை காண வேண்டும், அவரைப்பற்றி அறிய வேண்டுமென்று சக்கேயுவின் எண்ணமே இறைவனை அவர் இல்லத்திற்கே அழைத்து வந்தது. அவரது வருகை சக்கேயுவின் வாழ்க்கையில் இருளை அகற்றி அருளை நிரப்பியது. அவ்வருள் சமூக நீதியை நிலைநாட்டியது. உலக மாயைகளிலும், எதிர்பார்ப்புகளிலும் மூழ்கியிருக்கும் நம்மில் எத்தனை பேர் நம் இதயக்கதவுகளை தட்டிக்கொண்டிருக்கும் இறைவனின் குரலுக்கு செவிமடுக்கிறோம்? இறைவனை யாசிப்பது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் ஒன்றாக இல்லாமல் இறைவனே நம் அன்றாட வாழ்க்கையாகும் போதும், அவரை உணர வேண்டும் என்ற தேடல் நம்மில் பிறக்கும் போதுதான் நம்மில் இறைவனின் பிரசன்னம் ஊர்ஜிதமாகின்றது. இவ்வருகை நம்மில் எண்ணில்லா மனஅமைதியையும், மட்டற்ற மகிழ்ச்சியையும் எதிர்பார்க்க இயலாத மனமாற்றத்தை நிலை நிறுத்துகிறது. அவரை நமதாக்குவோம்! நாமே அவராவோம்.!



**தெலசாலின் பொன்மொழி**

**உங்கள் மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்துங்கள். அவர்களை அரசர்களின் குழந்தையைப் போல நடத்துங்கள்.** (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 4:1-11

இரண்டாம் வாசகம்
திபா. 150:1-6

நற்செய்தி
லூக்கா 19:11-28

புனித மார்கரெட்

நவம்பர் 2022
**16**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### அருளப்பட்டதை அருள் வாழ்வாக்குவோம்

இறையரசை நம்மில் நிலைநிறுத்துவதையும், இறையேசுவின் வருகையை நம்முடைய செயல்கள் வெளிப்படுத்துவதைப் பற்றி கடந்த இருவாரங்களில் தியானித்த நமக்கு இறையேசுவின் வருகையினால் நம்மில் மிளிரும் பலன்களைப் பிறரோடு பகிர்ந்து இரட்டிப்பாக்காமல், இறை வருகையினால் நடைபெற்ற மனமாற்றத்தைச் செயலினால் வெளிக்கொணராமல் இருத்தலாலும், நாம் இறைவனை இழக்க நேரிடும் என்ற எச்சரிக்கை ஒலி ஒலிக்கப்படுகிறது.

இறைவனோடு ஒன்றியிருந்தால் மட்டுமே, நீரோடையின் ஓரத்தில் நடப்பட்ட செழித்த மரமாவோம். இல்லையெனில் காற்றில் அடிக்கப்பட்டப் பதரைப்போல், யாவற்றையும் இழந்து சுழற்றியடிக்கப்படுவோம். ஆகையால் நமக்கு அருளப்பட்ட இறைவார்த்தைகளை நம்மில் வேரூன்றிப் பரவத் ஆதாயமாக்குவோம். இறைவிழுமியங்கள் நம்மில் தடையாக இருக்கும் வீழ்ச்சிக்குரிய சோதனைகளிலிருந்து தற்காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய நேரத்தையும், சிந்தனைகளையும் செயல்களையும் இறைவனோடும், இறைவனுக்காகவும் செலவிடும்போது, இறைவன் நமதாகிறார். அவருடைய இருப்பு நம்முடைய பலவீனங்களிலிருந்து விடுவித்து, இறைக்கனிகளை நம்மில் இரட்டிப்பாக்கிறது. நாம் பெற்ற இறையருளை நம்மோடு பயணிப்போரிடம் பகிர்வதன் மூலம் இறையேசுவையே கொண்டு செல்கிறோம் என்பதை உணர முற்படுவோம்.



### தெலசாலின் பொன்மொழி

உங்களுடைய வலிகள், துன்பங்கள், நீங்கள் உங்களுடைய பணியில் மேற்கொள்ளும் சோதனைகள் உங்களை சோர்வடையச் செய்வதைவிட, உங்களின் ஆர்வத்தை அதிகமாக்கி, இயேசுவை பலரிடம் கொண்டு செல்ல உதவுகிறதா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 5:1-10

பதிலுரைப்பாடல்
திபா. 149:1-6,9

நற்செய்தி
லூக்கா 19:41-44

**புனித எலிசபெத்**

நவம்பர் 2022

**17**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறையொளியின்றி வாழ்வொளியில்லை

இறைமகன் இயேசு ஒருவரே மனித வாழ்வில் இருளை அகற்றும் ஒளியும் வழியும் ஆவார். தன் இரத்தம் சிந்தி மனிதகுலத்தை மீட்டெடுத்த கல்வாரி ஆட்டுக்குட்டி அவரே. இவ்விறைவனின் பிரசன்னம் உலக மாயைகளில் கவர்ந்திழுக்கும் நம்முடைய கடினமான இதயங்களின் பாரங்களை எளிதாக்கும் மற்றும் நல்வழிப்படுத்தும். இதைத்தான் புனித தெலசால் இறைவனின் பிரசன்னத்தை உணர்வதையே தங்களது பணியின் மையமாக வலியுறுத்தியுள்ளார். இறைப்பிரசன்னத்தைத் தன்னகப்படுத்துவதே குழந்தைகளின் மீட்பிற்கான ஒரே சித்தாந்தமாக மையப்படுத்தியுள்ளார்.

இதயத்தை இறைப்பிரசன்னத்தால் அலங்கரிக்க தவறும்போது இகழ்ச்சியின் அவதாரமான அகங்காரம், ஆணவம், இச்சை, அவதூறு, காலந்தவறுதல், மேலும் காலாவதியான சிந்தனைகளால் ஆட்கொள்ளப்பட்டு அழிவை நோக்கிப் பயணிக்க நாம் முற்படுகிறோம். நம் இதயத்தை இறைவனுக்கு ஏற்புடைய இல்லமாக மாற்றுவோம். அவருடைய வருகை இறைவார்த்தைகளை கேட்கும் நம் செவிகளைத் திறக்கட்டும், இறைவிழுமியங்களை செயல்படுத்தக் கூடிய துணிவுள்ள மனப்பக்குவத்தை பெற்று, வாழ்வில் மன நிறைவுடன் இறையொளியை பிரகாசமாக ஒளிரச் செய்வோம்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் திருச்சபையை கட்டியெழுப்பும் பணியை உங்கள் சிறார்களுக்குப் போதிப்பதன் மூலம் செய்கிறீர்கள் (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 10:8-11

பதிலுரைப்பாடல்
திபா. 119:14,24,72,103,111,131

நற்செய்தி
லூக்கா 19:45-48

புனிதர்கள் பவுல், பேதுரு பெருங்கோவில் நேர்ந்தளிப்பு

நவம்பர் 2022
**18**
வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறைப்பிரசன்னத்தின்மீது நம்பிக்கை பணி ஆற்றலை வலுப்படுத்தும்

இறைப்பிரசன்னத்தின் மீது இருந்த நம்பிக்கையின் ஆழம் பவுலைத் துணிவோடு தேசமெங்கும் மறைபரப்புச் செய்ய வலுவூட்டியது. பேதுருவை கடல்மீது நடப்பதற்கான ஆற்றலை நல்கியது. இயேசுவை சிறைபிடிக்க வந்த படையாளியின் செவியை வாளால் துண்டிக்க பேதுருவுக்கு அளப்பரிய வீரத்தைத் தந்தது. இறைப்பிரசன்னத்தை முழுமையாக மனதுள் வாங்கும்போது எண்ணிலடங்கா வியத்தகு நிகழ்வுகள் சாத்தியமாகின்றன.

இறைவனை எங்கும் எதிலும் எப்பொழுதும் உணர்வதிலும் (Letter 87), நாம் இறைவனை உணருவதன் மூலம் அவர் நம் இதயத்தில் நுழைகின்றார் (Med 2.1) என்ற உணர்வோடு பணிபுரியும் போதும், சாதாரணக் கல்விப்பணி அசாதாரண இறைப்பணியாக உருவெடுக்கும் என்று ஆசிரியர்களின் பாதுகாவலர் புனித தெலசால் வலியுறுத்துகிறார்.

நாமும் இறைப்பிரசன்னத்தில் நிறைந்துள்ளோம் என்பதை நம் பணிவாழ்வில் மேற்கொள்கின்ற வியத்தகு செயல்கள் இவ்வுலகிற்குப் பறைசாற்றட்டும். இறைப்பிரசன்னத்தின் மீதுள்ள தீராத தாகம், நம் அனைவரையும் மனமாற்றத்தின் எடுத்துக்காட்டாகவும், இறை ஆளுமையின் அவதாரமாகவும், துணிவு நிறைந்த கேடயமாகவும், மன முதிர்ச்சியின் அடையாளமாகவும், தியாகச் செயல்களின் பிறப்பிடமாகவும் மாற்றட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் சோகமாக இருப்பது, உங்களுக்கு பலவித தீமையை கொண்டு வரும். (Ltr : 34)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 11:4-12

பதிலுரைப்பாடல்
திபா. 144:1-2,9-10

நற்செய்தி
லூக்கா 20:27-40

புனித கிரகோரியார்

நவம்பர் 2022

**19**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறைவனில் நம்பிக்கை இறப்பிலும் வாழ்வு தரும்

இச்சைகளின் மீது நம்பிக்கை கொண்டு வாழும் பொழுது அது அழிவைக் கொடுக்கும். ஆனால் இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழும் பொழுது இறப்பிலும் உயிர்ப்பைக் மெய்ப்பிக்கும். தனது உயிர்ப்பின் மூலம் சாவை ஒழித்து மண்ணக வாழ்வில் விண்ணகத்தை அவரது அருள்வாக்கின் மூலம் நிலைநாட்டியவர் இறைமகன் இயேசு கிறிஸ்து. இறைவார்த்தையால் தங்களது வாழ்விற்கு உயிரோட்டம் கொடுத்து இறைவனில் உயிர்த்தெழுந்த கடவுளின் மக்களாக வாழ இன்றைய இறைச்சிந்தனை அழைப்பு விடுக்கிறது.

இறைவனுக்காக எல்லாவற்றையும் இழக்க முன்வரும்பொழுது எல்லாவற்றிற்கு மேலான இறைவனையே நமதாக்குகிறோம். பவுலைப்போன்று வாழ்வது நானல்ல என்னில் இறைவனே வாழ்கிறார். (கலா 2:10) என்ற சிறந்த மனப்பான்மை நம்மிலும் மிளிருமாயின், நம்மில் இருந்து உதிக்கின்ற ஒவ்வொரு செயல்களும் இறைவார்த்தைகளைத் தாங்கிச் செல்லும் ஊடகமாக அமையும். இறைவனில் நாம் கொண்டிருக்கும் ஆழமான நம்பிக்கை நாம் பயிற்றுவிக்கும் குழந்தைகளுக்கு கலங்கரை விளக்காக அமைய வேண்டும் (Med 178.1) என்று புனித தெலசால் அவருடைய அருட் சகோதரர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் காட்டும் அக்கறைக்கு நான் உங்களுக்கு கடமைபட்டிருக்கிறேன்.
(கடிதம் - 34)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 சாமு 5:1-3

இரண்டாம் வாசகம்
கொலோசையர் 1:12-20

நற்செய்தி
லூக்கா 23:35-43

பொதுக்காலம்
34-ம் ஞாயிறு

நவம்பர் 2022

**20**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### ஒப்பில்லா விண்ணக மண்ணகத் தந்தை

கிறிஸ்துவே ஒப்பற்ற அரசர், ஆதி முதல் அந்தம் வரை ஆளும் ஒரே பேரரசர். அநீதிகள் நிறைந்த உலகத்தில் மனித சமுதாயத்தைச் சிலுவையைக் கொண்டு மீட்டெடுத்தவர். இறைஇயேசுவின் இரத்தக்கரை நம் அனைவரின் பாவக்கரையைக் கழுவுவதற்காக சிந்தப்பட்டது. மனித மீட்புக்காக மனிதனாகி, கல்வாரி மலையில் கழுவாய் ஏந்தி பலியாக காத்திருந்த ஒரே மாமன்னன், இறைமகன் இயேசுகிறிஸ்துவே.

இயேசுவை ஆய்ந்தறிந்தவர்கள் அவர்களது வாழ்வினில் மீட்பைக் கண்டார்கள், வாழ்வில் ஏற்றம் பெற்றார்கள். அவரை அரசராக ஏற்றவர்கள் அவரை அனுப்பிய இறைவனையே ஏற்றார்கள். அவர்களின் வாழ்வில் நீதி, மகிழ்ச்சி, அமைதி போன்ற தூய ஆவியாரின் கொடைகள் மிளிர்ந்தன. இறைவனில் மனமாற்றமடைகின்ற ஒவ்வொருவருக்கும் வாழ்வின் இறுதியில் கூட மீட்பு உண்டு என்பதை, இறை இயேசுவோடு சிலுவையில் தொங்கிய கல்வனின் மீட்பு உத்திரவாதப்படுத்துகின்றது. நம் ஒவ்வொருரின் சிந்தனை, சொல் மற்றும் செயல்கள் மூலம் இறைமகன் இயேசு அரசராக ஆட்சி செய்கிறார் என்பதை இவ்வுலகம் அறியவும், அறிந்தவர்கள் அவரையே தங்கள் வாழ்வில் அரசரா ஏற்கவும் உதவி புரிவோமாக.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் கடவுளின் இல்லத்தில் மகிழ்ச்சியாக உள்ளீர்கள். அவரது பணியை தொடர்கிறீர்கள். செபத்தின் மூலம் நீங்கள் கடவுளின் அருளால் நிரப்பப்பட வேண்டும் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

**இருப்பதில் கொடுப்பதைவிட இருப்பதையே கொடுப்பது முழுமை**

கொடுப்பதில் இன்பம் பெறுவது இல்லை என்பது முழுமையான ஈதலின் வெளிப்பாடு. இவ்வெளிப்பாட்டை தன்னையே முழுமையாக மனித மீட்புத் திட்டத்திற்காக ஈந்தவர் இயேசு கிறிஸ்து. நிந்தனைகளின் அடிப்படையில் உறவை பரிமாறும் இக்காலச் சூழலில், எவ்வித எதிர்பார்ப்பின்றி மீட்பின் பணியில் இறைவனோடு இணைந்து பணிபுரிவதை மட்டுமே இலக்காகக்கொண்டு நம்மை இறைவனுக்கு முழுமையாகக் கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

சவால் நிறைந்த இந்த அழைப்பு இறைவனை நாடும் ஒவ்வொருவரையும் தகுதிப்படுத்தி, இறைபணிக்குள் உட்படுத்தப்படுகிறது. வெவ்வேறு தனிவரத்தின் அடிப்படையில் இறை அழைப்பை மேற்கொண்டுள்ள நாம் இறை அழைப்பை விடுத்த இறைமகன் இயேசுவின் பணியை முதன்மைப்படுத்தி, அவருடைய இறைத்தூண்டுதலின்படி வாழ நம்மையே எவ்வித நிர்பந்தமின்றி முழுமையாக ஒப்புக்கொடுக்கும் பொழுதுதான் நம் இறையழைப்பின் பொருள் உறுதிபெறுகிறது. இறையழைப்பிற்கு மகத்துவத்தை ஏற்படுத்தி தந்த இறைஇயேசுவுக்கு நம்முடைய அர்ப்பணிப்பை முழுமையாக்க முற்படுவோம்.

முதல் வாசகம்
தி.வெ 14:1-3,4-5

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-6

நற்செய்தி
லூக்கா 21:1-4

மரியா ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா

நவம்பர் 2022
**21**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC



**தெலசாலின் பொன்மொழி**
அன்னை மரியாள் காணிக்கையாக்கப்படுதல்
உங்களின் பிரச்சனைகளைவிட கடவுளின் இரக்கம்
அதிகமானது (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 14:14-20

பதிலுரைப்பாடல்
திபா. 96:10-13

நற்செய்தி
லூக்கா 21:5-11

புனித செசிலியா
கன்னி
மறைசாட்சி

நவம்பர் 2022

**22**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

**நல்ல எண்ணங்கள் நம் உள்ள ஆலயத்தை அழகு செய்யட்டும்**

நம் அகத்தின் அழகினை மிளிரூட்டுவதற்கான காலம் இது. வெளி அழகோ நிரந்தரமற்றது. இறைவன் நம் அகத்தையே விரும்புகிறார். (1 சாமு 16:7). நாமோ புறத்தையே நம்புகிறோம், நேசிக்கிறோம், மேலும் அழகுபடுத்த முனைகிறோம். யாரெல்லாம் இறைமகன் இயேசுவை நம் அகத்தில் ஏற்கிறோமோ அன்றுமுதல் நம் அகம் இறைவன் பிரகாசிக்கும் ஆலயமாக மிளிரும்.

தேவையின் நிமித்தம் இறைவனைத் தேடும்பொழுது, இறையருளை ஆய்ந்துணர்வதை மறந்து தேவையைப் பூர்த்தி செய்யும் நபர்களையும், சித்தாந்தங்களையும் பின்தொடர முனைகிறோம். சவால்களை சந்தித்து வெற்றியடைதலைத் தவிர்த்து, உலக வேரோட்டமற்ற போக்குகளில் தங்களையும் இணைத்துக் கொண்டு, புறத்தில் மிளிரினாலும் அகத்தில் வெறுமையினால் இருளாடும் அவல நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இறைமகன் இயேசுவை அனுபவப்பூர்வமாகக் கண்டறிவோம். உறவாடுவோம். அவருடைய எண்ணங்கள் நமதாகட்டும். அந்த எண்ணங்களின் வெளிப்பாடு நம் அகத்தை அழகுறச் செய்யட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் பணியில் நீங்கள் காட்டும் ஆர்வம், உங்கள்மேல் கடவுளின் அருளை நிறைவாக பொழியும். (Ltr:17)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 15:1-4

பதிலுரைப்பாடல்
திபா. 98:1-3,7-9

நற்செய்தி
லூக்கா 21:12-19

புனித முதலாம் கிளமெண்ட்

நவம்பர் 2022

**23**

புதன்கிழமை

### கிறிஸ்துவுக்காக நான் கிறிஸ்துவாகவே நானே

"இறுதிவரை இறைவனுக்காய்" என்ற இயேசுவிற்கும் அவர் தந்தைக்கும் இடையே உள்ள உடன்படிக்கை, இன்றைய இறைச்சிந்தனை நம் அனைவருக்கும் ஓர் வேண்டுகோளாக அமைகிறது. தன் இறைத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக இறுதிவரை சிலுவைச்சாவிலும நிலைபிறழாமல் நிலைத்த நின்ற இயேசுவின் உறுதியை நாமும் நம்மில் விதைக்க அழைக்கப்படுகிறோம்.

சுயநலத்திற்காக இறை விழுமியங்களைச் செயலாக்க மறுக்கும்பொழுது நாமும் அவ்வேளையில் பேதுருவைப் போன்று இயேசுவை மறுதலிக்க முற்படுகிறோம். மறுதலித்தின் விளைவு ஆன்மீக வெறுமையின் ஆரம்பம் கிறிஸ்துவுக்காக வாழ்வது என்பது மிகவும் சவால் என்பது இச்சமுதாயத்தில், கிறிஸ்துவாகவே மாறுவது என்பது அரிது. இயேசுவின் மீது நாம் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையும் அவரோடு செலவிடுகின்ற நேரங்களும், அவருடைய வார்த்தைகளைச் செயல்படுத்த முனையும் துணிவும் இறைவனின் இருப்பை நம்மில் உறுதிசெய்கிறது. இந்த உறுதி எவ்வித சவால் நிறைந்த சூழலிலும் நம்மை இறையேசுவின் அவதாரமாக வெளிக்கொணர்வதற்குரிய எல்லாவித ஆற்றலையும் அளிக்கிறது.



**தெலசாலின் பொன்மொழி**

பலரை கிறிஸ்தவ நெறியில் வழிநடத்துபவர்
நிலைவாழ்வில் விண்மீனை போல திகழ்வார். (MSF)

சிந்தனை
அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 18:1-2,21-23;19:1-3,9

பதிலுரைப்பாடல்
திபா. 100:1-5

நற்செய்தி
லூக்கா 21:20-28

புனிதர்கள்
ஆன்ட்ரு டங் லாக்
மற்றும் தோழர்கள்

நவம்பர் 2022
**24**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறைவனின் இயக்கம் நிலைவாழ்வின் தொடக்கம்

இன்றைய விவிலிய வரிகள் அழிவின் ஆரம்பத்தை எடுத்துவைத்தாலும், அது இறைவனின் அரவணைப்பிலிருந்து விலகி இருப்போருக்கு ஏற்படும் வடுக்கள் நிறைந்த சவால்களை அட்டவணையிடுகிறது. இறுதிவரை இறைவனுக்காக சவால்களையும், துன்பங்களையும் ஏற்கும் ஒவ்வொருவருக்கும் நிலைவாழ்வு உறுதி என்பது இன்றைய இறைச்சிந்தனையின் மையமாகும்.

நம்மில் இறைவன் குடியேறும்பொழுது, நம்மில் இருக்கின்ற அவதூறுகள் அழிந்தும், பிறரை ஏளனமாக கருதும் எண்ணங்களை எரித்தும், உடலின் எதிர்பார்ப்புகளில் உள்ள ஏக்கங்கள் சிதைந்தும் போய் விடுகின்றன. தகவல் ஊடக பொருள்களின் மீதும், நிகழ்வுகளின் மீதும் உள்ள அடிமைத்தளங்கள் வேரோடு அழிந்தும், பகட்டான வாழ்வின் மீதுள்ள ஆர்வம் அடியோடு வேரறுக்கப்படுகின்றன.. இவ்வகையான அழிவுகள் நம்மை இறைவனில் இயங்குவதற்கு வழிவகுக்கிறது. இவ்வியக்கம் நிலைவாழ்வை நம்மில் உறுதி செய்கின்றது.



**தெலசாலின் பொன்மொழி**

நல்ல நிலையில் தன் மாணவன் இருப்பதை கண்டு
ஒரே சகோதரன் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான்!
அவர்களிடையே எத்தகைய மகிழ்ச்சி
பரிமாற்றம் இருக்கும்! (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 20:1-4,11 21:2

பதிலுரைப்பாடல்
தி.பா. 84:2,3,4,5,7

நற்செய்தி
லூக்கா 21:29-33

புனித கத்தரின்

நவம்பர் 2022

**25**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறைவனுக்கான காரியங்கள் மூலம் விண்ணகத்தை தமதாக்குவோம்

இறைவிழுமியங்கள் அன்றாட வாழ்க்கையின் அடிப்படையாகும் போது இறைவனோடு பிரவேசிக்கும் விண்ணக வாழ்வும் நமக்குரியதாகிறது. இறைவிழுமியங்களுக்கு எதிரான செயல்கள் அனைத்தும் தவறான முடிவுகளையும், விடியலுக்கான தோல்வியையும் தேடித்தருகின்றன. உலகில் நிகழும் வெளி அடையாளங்களின் தீர்ப்பு நாளை வெளிப்படுத்துவதுபோல், இறைவன் நம்மில் இயங்கும்போது இறையாட்சி வாழும்பொழுதும் சாத்தியம் என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது.

இறுதி நாளில் தீர்வையும், அழிவையும் கண்டு வியந்தும், பயந்தும் வாழ்க்கையைச் செப்பனிட முனைவதற்குமுன் சவால் நிறைந்த சமூகத்தில் வாழும் ஒவ்வொரு நிமிடமும் இறைவனால் இயங்க முற்படுவோம். இறைவனுக்காக இயங்குகிறோம் என்று ஆன்மீக வாழ்க்கையை வழிநடத்தும் போது விண்ணகம் மண்ணகத்திலேயே சாத்தியமாகிறது. நம்மோடு வாழும் குழுமத்தினரும், உடன் உழைப்பாளிகளும் மற்றும் பயனாளிகளும் விண்ணக வாழ்வின் மகுடத்தை நம்மில் உணரவும், அனுபவிக்கவும் நம் இறை உந்துதல் நம்மை வழிநடத்தட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளின் பிரசன்னத்தில் இருப்பவர்களிடையே எத்தகைய ஒற்றுமை இருக்கும். அவரின் அருளை பகிர்ந்துகொள்ளும்போது ஏற்படும் மகிழ்ச்சி, கடவுள் புனிதர்களுக்கு அளித்ததற்கு இணை. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தி.வெ 22:1-7

பதிலுரைப்பாடல்
திபா. 95:1-7

நற்செய்தி
லூக்கா 21:34-36

அருளாளர்
அல்போரியன்

நவம்பர் 2022

**26**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### விழிப்பும் ஜெபிப்பும் இறைவனுக்காக காத்திருக்கும் இரு கண்கள்

இறைவனைத் தவிர ஏனையவைகள் அனைத்தும் மாயையாக உள்ள இவ்வுலகில், உலக போக்கின் எதிர்பார்ப்புகளுக்குள் அகப்படாமல், விழிப்பாய் இருப்பதற்கும், தன்னில் தக்கவைத்த இறையரசை இழக்காமல் இருப்பதற்கும், தொடர்ந்து ஜெபிப்பதற்கும் அழைக்கப்படுகின்றோம். இரு கண்களாகிய விழிப்பாயிருத்தலிலும், ஜெபித்தலிலும் ஒளி மங்கினால், இறைவனைத் தேடி அவரது அன்பை இரட்டிப்பாக்கும் இலக்கு தடைபட கூடும்.

மணம் போன போக்கில் வாழுதுலும், இறைவனோடு உறவாடுவதைக் கால அட்டவணைப்படி கையாளுதலும் இறைவனோடு ஒன்றாக கலந்து வாழும் தன்மையை மறுக்க நேரிடும். இவ்வகையான மனநிலை, பெற்ற இறையழைத்தலைக் கூட அசைத்துப் பார்த்துவிடும். சோதனைகளிலிருந்து தற்காத்துக் கொள்ள விழிப்பாயிருந்து ஜெபியுங்கள் (மாற்கு 13:35-37) என்ற இறைமகனின் வார்த்தைகள் இறைப்பணியாளர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் அறை கூவலிடுகின்றது. நம் சிந்தனை, சொல் மற்றும் செயல்களில் விழிப்பாயிருந்து ஜெபிப்பதைக் கேடயமாகக் கொண்டு திரண்டுவரும் சோதனைகளை வெல்வோம். மேலும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளும் இறைப்பராமரிப்பில் இருந்த தவறாமல் இருப்பதற்கும், விழிப்பாயிருந்து ஜெபிக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும் இன்றைய மையச்சிந்தனை வலியுறுத்துகின்றது.



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் சீடர்கள் உங்கள் பணியை விசுவாசத்துடன் செய்து வரும்போது அது எத்தகைய மகிழ்ச்சியை உங்களுக்கு தரும்!. (MSF)

COMMUNICATION COMMISSION · DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 2:1-5

இரண்டாம் வாசகம்
உரோமையர் 13:1-14

நற்செய்தி
உரோமையர் 13:1-14

திருவருகைக்காலம்
முதல் ஞாயிறு

நவம்பர் 2022

**27**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### விழிப்புடன் காத்திருப்பு இறை மாட்சியைப் பரிசாக்கும்

திருவருகைக் காலத்தின் முதல் நாளில் இருக்கும் நம் ஒவ்வொருவரின் உள்ளங்களும் இறைவனின் திருவருகைக்கு ஆயத்தமாக இருக்கின்றதா என்று விழிப்பாய்வுச் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இறைவனின் வருகையை நம் உள்ளத்தில் ஏற்க இயலாத மனப்போக்கான வேற்றுமை பாராட்டல், அநீதிக்கு துணைபோகும் முதுகெலும்பில்லா சோம்பேறித்தனமும், இறைப்பணிக்கு சாதகமில்லாத பணம், பொறுப்பு மற்றும் சாதி மீதுள்ள அதிக பற்றுருதியும், மது மற்றும் மாதுவில் அடிமையாதலும் முற்றிலும் வேரறுக்க இன்று இறைவன் அழைப்புவிடுக்கின்றார்.

இவ்வுலக வாழ்வுக்குரிய கவலையில் அதிக நாட்டத்தை விரயமாக்காமல், இறைப்பிரசன்னத்திலும், நேர்மறை சிந்தனை மற்றும் செயல்களில் விலைமதிப்பில்லாக் காலத்தை முதலீடு செய்யும்பொழுது இறைவனின் அன்பும் பராமரிப்பும் இரட்டிப்பு பலனாக நம்மை அடையும். இறைவனின் வருகை நம்மில் மேலே குறிப்பிட்ட இருளடைந்த சிந்தனைகளை அகற்றி இறையொளி நம்மில் ஒளிரச் செய்யும். நம்மில் ஒளிரும் இறையொளி நம்மைச் சார்ந்தவர்களையும் இறைவனின் வருகைக்கு ஆயத்தமாக்கட்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் பாதை கடினமாக உணரும்போது, கடவுளிடம் ஒப்புக்கொடுங்கள் அவர் உங்களை வழிநடத்துவார். MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 4:2-6

பதிலுரைப்பாடல்
திபா. 122:1-2,4-9

நற்செய்தி
மத்தேயு 8:5-11

லாபோர் நகர் புனித காத்ரீன்

நவம்பர் 2022
**28**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC

## சிந்தனைத் துளிகள்


**இறை நம்பிக்கையின் ஆழத்தை நம்மில் மிளிரும் இறைச்செயல் வெளிப்படுத்தும்**

இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டவர்கள் இறைவனையே கண்டார்கள், இறைவனின் இயக்கமாகவே மாறினார்கள். அவர்களுடைய செயல்கள் அனைத்தும் இறைவன் பயணிக்கும் ஊடகங்களாகவே உருப்பெற்றன. நம்முடைய செயல்கள் இறைநம்பிக்கையின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றதா? நிர்பந்தங்களோடு விசுவசித்தலும், தேவையின் அடிப்படையில் விசுவசித்தலும் நம்முடைய ஆழமற்ற இறைநம்பிக்கையை புலப்படுத்துகிறது.

இறைத்தந்தை இயேசுவோடு இருந்தார் என்பதை இயேசுவுடைய வாழ்க்கைச் செயல்பாடுகளும், உயிர்ப்பும் எடுத்துரைத்தன. சவுலும், சக்கேயுவும் இயேசுவை இதயத்தில் ஏற்றார்கள். அவர்களின் மனமாற்ற செயல்கள் விந்தைக்குரியனவையாக அமைந்தது. நம்முடைய செயல்கள் அனைத்தும் இறைவனுடைய நற்செய்திகளாக உருவெடுக்க வேண்டும். (Med 84.B) என்பதைப் புனித தெலசால் ஆழமாக நமக்கு வலியுறுத்துகிறார். நாம் இறைவனின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நம்முடைய நேர்த்தி மிகுந்த செயல்கள் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தட்டும்.

### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் மறைநூலைபற்றி தெளிவாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். மறைநூலை தொடர்ச்சியாக படியுங்கள். அது உங்களை கடவுளின் ஆவியால் நிரப்பும். உங்கள் மாணவர்களை வழிநடத்த உதவும். (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

### இறையனுபவ உணர்வு அனைவருக்கும் சாத்தியம் என்பது அரிது

நாம் பெற்ற இறைஅழைப்பும், தனி வரங்களும் நம்மால் அடையப்பெற்றவையல்ல, மாறாக இறைவன் நம்மைத் தேர்ந்தெடுத்து அவைகளை அருளியுள்ளார். இவ்வகைப் பாக்கியம் பெற்றவர்கள் ஞானத்திலும், மெய்யுணர்விலும் நிறைந்தவர்களாகவும், அறிவுரைத் திறன் பெற்றவர்களாகவும், நுண்மதி உடையவர்களாகவும், மேலும் இறையச்சம் கொண்டவர்களாகவும் இறைப்பணியை மேற்கொள்ள வேண்டுமென்பதும் இறைவனுடைய ஆவல். நம் இறையழைப்பின் மேன்மை இறைவனின் ஆவலைப் பூர்த்தி செய்கிறதா?

இறை நம்பிக்கையில் ஆழம் கொண்டோர் மற்றும் இறைவார்த்தையின் விழுமியங்களைத் தன்னகப்படுத்தி அதைச் செயலாக்க முனைவோர் மட்டுமேயாவர். இறையுணர்வை அனுபவிக்க இயலும். இந்த இறையனுபவம் மூலம் தாம் மேற்கொள்கின்றப் பணிகளில் வரும் அனைத்துச் சவால்களையும் சந்தித்து அசாதாரண வெற்றிகளின் மூலம் உலகிற்கு இறையாற்றலின் வல்லமையினை எடுத்துரைக்க இயலும். இறையனுபவம் கொண்டவர்களால் மட்டுமே வகுப்பறைக் கல்வியில் குழந்தைகளின் வாழ்க்கையில் மனமாற்றம் என்ற அதிசயத்தை நிகழ்த்த இயலும் என்று புனித தெலசால் அவரது அருட்சகோதரர்களுக்கு எடுத்துரைக்கின்றார். இறையனுபவம் பெற தூய ஆவியின் உதவிக்கரத்தை நாட முற்படுவோம்.

முதல் வாசகம்
எசாயா 11:1-10

பதிலுரைப்பாடல்
திபா.72:1-2,7-8,12-13,17

நற்செய்தி
லூக்கா 10:21-24

புனித
பிரான்சிஸ் அந்தோணி
ஃபசானி

நவம்பர் 2022
**29**
செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் இயேசுவை பின்பற்றுகிறீர்கள் என்றால்,
கடவுள் உங்களிடம் பேசும்போது
விசுவாசமுள்ளவர்களாக செயல்படுகிறீர்களா?
(MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
உரோமையர் 10:9-18

பதிலுரைப்பாடல்
திபா. 19:1-4

நற்செய்தி
மத்தேயு 4:18-22

புனித அந்திரேயா

நவம்பர் 2022

**30**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிக்ஸ்டன்** FSC

### இறைப்பற்றின்றி இறையழைப்பில் நிலைப்பில்லை

இறையனுபவமே ஆன்மீகத்தின் அடித்தளம். இறையேசுவைத் தேடி, அறிந்து, உணர்ந்து, நேசித்து அவர் பணியை ஏற்க எதையும் தந்து, நம்பிக்கையில் நிறைந்து தயார் நிலைக்கு உந்தப்படுவதே இறையனுபவத்தின் இலக்கு. இறையனுபவம் இல்லாவிடில் ஏற்றுக்கொண்ட இறைப்பணியில் சருக்கல் சாத்தியமே. இறையேசுவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கை, முதல் திருத்தூதர் அந்திரேயா முதல் நாம் வரை இயேசுவின் அழைப்பிற்கு எவ்வித நிர்பந்தமின்றி பின்தொடர ஊக்கமளிக்கிறது.

இறையேசவின் தெய்வீகப் பணியையாற்ற அழைக்கப்பட்ட நாம் இயேசுவை மனதார உணர்ந்து, துன்ப வேளையில் கூட துயருராமல் அவரை நமது அருஞ்செயல்களால் வெளிக்கொணர்கின்றோமா? என்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இன்றைய இறைச்சிந்தனை நாம் பெற்ற இறையழைப்பினைக் கொண்டு இறைபணியாற்றாமல், இதன் வாயிலாக நம்மையும் நம் சுற்றத்தாரையும், பொறுப்புகளிலும் பொருளாதாரத்திலும் வலுப்படுத்துகின்றோமா? அல்லது இயேசுவின் சிடர்களைப் போல் அனைத்தையும் உடனே துறந்து அவரை பின்பற்ற முனைகின்றோமா? இறைவன் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கை இறைப்பற்றை வளர்க்கும், இறைப்பற்று இறைப்பணியில் இயேசுவை மையமாக நிலைநிறுத்தும். இறைப்பணியில் நிறுவனங்களையும், நிறுவனர்களையும் தாங்கிப் பிடிக்கும் வேளையில் இப்பணிக்கு அழைக்கப்பட்டுள்ள நாம் இறைஇயேசுவை மையமாகக் கொண்டு வாழ முற்படுவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

புனித அந்திரேயா, திருத்தூர்

புனித அந்திரேயா இயேசுவின் முதல் சீடராய் இருக்கும் பேறுபெற்றவர். இயேசு அவருக்காக சிறந்த அன்பு கொண்டிருந்தார்.அவருடைய தோழமையில் மகிழ்ச்சி கண்டார். (MSF)






# லசாலிய தெற்காசிய மாநில முதல் அமர்வு தயாரிப்பிற்கான ஜெபம்

எம் தந்தையாம் இறைவா,
புதிய தொடக்கங்களின் ஆதாரமே
லசாலிய தெற்காசிய மாநிலமாக
எம்மை இணைத்ததற்காக எமது நன்றியினை
வெளிப்படுத்துகிறோம்.
எமது முதல் மாநில அமர்வினை ஆசீர்வதியும்
இறைமகனே, எமது மாறுபட்ட லசாலியப் பணிகளின்
வழியாக நாங்கள் உம்மை மகிமைப்படுத்துவதால்
எம்மை வலுப்படுத்தும்,
நம்பிக்கையாலும், தொலைநோக்கு பார்வையினாலும்
மனத்திடத்தினாலும் எம்மை நிரப்பும்.

ஆவியாம் இறையே,
"புதிய விடியல்களை நோக்கிய பயணத்தினை"
நாங்கள் முன்னெடுத்துச் செல்வதால்
எமக்கு வல்லமையினைத் தாரும்.
காலத்தின் தேவைக்கான அடையாளங்களில்
உமது குரலுக்கு செவிமடுப்போமாக.

எம் நிறுவனரும் தந்தையுமான புனித தெலசாலே,
விசுவாத்தினையும் ஆர்வத்தினையும் கொண்ட
உமது சீடர்களாகிய நாங்கள் எமது பணியினை
விளிம்பு நிலைகளுக்கு எடுத்துச் செல்ல
ஆசிப்போமாக.

மரியே, இறைவனின் தாயே
உமது பணியினில் நாங்கள் பங்கேற்கவும்
உமது பாதுகாப்பிலும் வழிகாட்டுதலிலும்
எமது தயாரிப்பினையும், பகுத்தாய்வினையும்
எமது முதல் மாநில அமர்வில் தீர்மானங்களையும்
முன் வைக்கின்றோம்.
லசாலிய புனித சகோதரர்களே,
உங்களது இறைப்பணியின் ஆர்வத்தினில்
நாங்கள் புத்துணர்வினை அடைவோமாக.
எம்மை சமத்துவக் குழுமங்களைப்
படைக்கவும் லசாலிய சகோதரத்தினை வாழவும்
செய்வதாக.

புதிய பாதைகளை நாங்கள் முன்னெடுப்பதால்
இத்தருணமானது நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின்
வழியாக எளிமையும், நம்பிக்கையும், மனத்திடமும்
கொண்டதொரு கொண்டாட்டமாக இருப்பதாக.

– ஆமென்.









# இம்மாத லசாலிய புனிதர்கள்

## ஸ்பெயின் நகரத்து மறைசாட்சிகள்

**திருவிழா : நவம்பர் 6**

## ஜெபம்

அருள் நிறை இறைவா,
நீயே நற்தகப்பானகவும், வழிகாட்டியாகவும்
ஆதரவாகவும், பேரானந்தமாகவும்
வலுவாகவும், ஒளியாகவும் நாள்தோறும்
இருப்பதாக எம் அருட்சகோதரர்கள்
உமக்குச் சான்று பகர்ந்தார்கள்.
ஸ்பெயின் நகரத்து மறைசாட்சிகளான
எம் அருட்சகோதரர்கள் நற்செய்தியின்
வல்லமைக்கு முன்னுதாரணம் கொண்டனர்.
அந்நற்செய்தியின் வல்லமையினால்
நாங்களும் தூண்டி எழவும், அதனை
பெருமையாக ஏற்று வாழவும் உமது
ஆவியினை எம் மீது பொழிந்தருளும்.
எங்களது சிலுவையினை நாங்கள்
தைரியமுடன் தழுவவும் உமது
அன்பிற்கு நற்சான்றாக விளங்கவும்
எமக்கு அருள்தாரும் .

– ஆமென்


வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் டிசம்பர் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. சேவியர் ராஜா FSC,

Lasad For India | De La Salle Bros-LASAD India | www.lasalleindia.org